# கல்லூரிக் கல்வித் துறை

அனுப்புநர்
**முனைவர்.சி.பூரணசந்திரன்,**
**எம்.சி.ஏ, எம்.ஃபில்., பி.எச்.டி.,**
கல்லூரிக் கல்வி இயக்குநர்,
கல்லூரிக் கல்வி இயக்ககம்,
சென்னை - 600006.

பெறுநர்
1. அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்.
2. அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர்கள்.
3. இயக்குநர் தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை - 600025.
4. இயக்குநர் மருத்துவக் கல்வி இயக்ககம், சென்னை - 600010.
5. அனைத்துபல்கலைக்கழக பதிவாளர்கள்.
6. அனைத்து நிகர்நிலைப் பல்கலைக்கழக பதிவாளர்கள்.

ந.க.எண்.10094/எல்/2021-3 தேதி: 22 .10.2021

பொருள்: கல்லூரிக் கல்வித்துறை - **Central Sector Scheme of Scholarship for College and University Students** (**CSSS**) உதவித்தொகை இணையதளத்தில் விண்ணப்பித்தல் - தொடர்பாக.

பார்வை: **19.08.2021** நாளிட்ட மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சக சார்பு செயலரின் கடித எண்.1-39/2018 NS-1.

***************

புதுதில்லி, மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்திலிருந்து வழங்கப்படும் திறன் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை **2020-2021** கல்வியாண்டில் பயின்ற மாணாக்கர்கள் பெறுவதற்கு புதிதாக **Online**-ல் விண்ணப்பிக்க பின்வரும் இணையதளம் துவங்கப்பட்டுள்ளது.

**PORTAL NAME : NATIONAL SCHOLARSHIP PORTAL**

**Website Address :** www.scholarships.gov.in

மேலும் மாணவர்கள் இணையதளத்தில் விண்ணப்பிக்க பின்வரும் தகவலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்கள் +2 மதிப்பெண் பட்டியலில் உள்ளவாறு மட்டுமே பெயர் மற்றும் Initial-லை வரிசை மாறாமல் பதிவு செய்ய வேண்டும்.

**(OPTION - 1)**

**Names in MarkSheet and Aadhaar Match**

**(For Example: Name In MarkSheet: VINOTH S Name In AadhaarCard: VINOTH S)**

**Online-**ல் விண்ணப்பிக்கும்பொழுது மாணவர்களின் மதிப்பெண் பட்டியலில் உள்ளவாறு ஆதார் அட்டையிலும் பெயர் மற்றும் **Initial** சரியாக இருந்தால் மட்டுமே Identification Detail-லில் ஆதாரை தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

இம்மாணவர்கள் வங்கி கணக்கு புத்தக நகல் (SCANNED COPY OF BANK PASSBOOK) மற்றும் (BONAFIDE CERTIFICATE) பதிவேற்றம் செய்ய தேவையில்லை.

**(OPTION - 2)**

**Names in MarkSheet and Aadhaar Mis-Match**

**(For Example: Name In MarkSheet: VINOTH S Name In AadhaarCard: VINOTH SUNDAR)**

**(For Example: Name In MarkSheet: VINOTH S Name In AadhaarCard: S VINOTH)**

மதிப்பெண் பட்டியலில் உள்ளவாறு ஆதார் அட்டையிலும் பெயர் மற்றும் Initial சரியாக இல்லையெனில் Identification Detail-லில் மாணவர்கள் தங்களது வங்கி கணக்கு எண்ணைத் **(BANK A/C No)** தேர்ந்தெடுத்தல் வேண்டும்

**OPTION - 2-ல்** பதிவு செய்யும் மாணவர்கள் தங்களின் வங்கிக் கணக்குப் புத்தகத்தின் முதல் பக்கத்தை SCAN செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும். மேலும் இறுதி பதிவேற்றத்திற்கு முன்பு மாணவர்கள் தங்களின் கல்லூரி (BONAFIDE CERTIFICATE FORMAT)-ஐ பதிவிறக்கம் செய்து தாங்கள் பயிலும் முதல்வர் / துறைத்தலைவரிடம் சான்று பெற்று பதிவேற்றம் செய்ய வேண்டும். அவ்வாறு பதிவு செய்தால் மட்டுமே மாணவர்களின் விண்ணப்பம் பூர்த்தி அடையும்.

1. விண்ணப்பிக்க கடைசி தேதி : 31.11.2021

2. மேற்கண்ட தகவலினை சார்ந்த கல்லூரி முதல்வர்கள் சுற்றறிக்கையின் வாயிலாக முதலாமாண்டு மாணவ/மாணவியருக்கு வகுப்பு வாரியாக அறிவிக்க வேண்டும். கல்லூரியின் அறிவிப்பு பலகையிலும் கடைசி தேதி முடியும்வரை வைக்கப்பட வேண்டும் மேலும், மின்னணு மற்றும் மின்னஞ்சல் வழி பரிமாற்றத்தின் மூலமும் மாணாக்கர்களுக்குத் தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

3. மேலும் மாணவர்கள் உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க ஏதுவாக மாதிரி படிவம் **www.tndce.tn.gov.in** என்ற கல்லூரிக் கல்வித் துறை இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>உதவித்தொகையின் விவரம்:</u>

| UG | | | |
|---|---|---|---|
| 1st Year | 2nd Year | 3rd Year | TOTAL |
| 10000 | 10000 | 10000 | 30000 |
| | | | |
| PG | | | |
| 1st Year | 2nd Year | TOTAL | |
| 20000 | 20000 | 40000 | |

இந்தக் கல்வி உதவித்தொகை பெறுவதற்கான மேற்குறித்த விதிமுறைகளைத் தெரிவித்து ஏற்கனவே சுற்றறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டன. அதன் அடிப்படையில், இந்தக்கல்வியாண்டில் இதுவரை புதிதாக விண்ணப்பித்துள்ள மற்றும் புதுப்பித்துள்ள மாணாக்கர்கள் குறித்த விவரங்களை இணைப்பில் காணும் படிவத்தில் தொகுத்து அனுப்பி வைக்குமாறும் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு:

**UG-முதலாமாண்டில் விண்ணப்பித்த மாணவர்களுக்கு மட்டுமே PG-உதவித்தொகை வழங்கப்படும்.**

21.10.21

**கல்லூரிக் கல்வி இயக்குநர்**

21/10/2021

**இணைப்பு:**

1. MODEL APPLICATION FORMAT (STUDENT HELP-FILE)
2. SCHOLARSHIP ABSTRACT